## எந்த இடர் வந்தாலும், யார் தடை போட்டாலும், அதைவென்று

# தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வோம்!

## நாகை அரசு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் சூளுரை!

**நாகை, மார்ச் 4-**

**“எந்த இடர் வந்தாலும், யார் தடை போட்டாலும், அதைவென்று தமிழ்நாட்டை மக்கள் துணையுடன் வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்வோம்” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாகையில் நடைபெற்ற அரசு விழாவில் உரையாற்றும் போது சூளுரை மேற்கொண்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.3.2025) நாகப்பட்டினம் மாவட்ட அரசு விழாவில், முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை வருமாறு:-

நாகப்பட்டினம் மாவட்ட அரசு விழாவில், முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி மற்றும் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கக்கூடிய இந்தச் சிறப்பான விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

### சமத்துவம் உலவும் நாகை மாவட்டம்!

நீர் வளமும், நில வளமும், கடல் வளமும் சூழ்ந்திருக்கக்கூடிய தமிழர்களுக்கு நாகர்கள் என்ற பெயர் வரக் காரணமானது, இந்த நாகை மாவட்டம்! தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை என்று போற்றப்படும் மறைமலையடிகள் பிறந்தது, இந்த நாகை மாவட்டம்! ஒரு பக்கம் சிக்கல் சிங்காரவேலர் கோயில் - மற்றொரு பக்கம் வேளாங்கண்ணி - மற்றொரு பக்கம் நாகூர் தர்கா என்று நல்லிணக்கத்திற்கு எடுத்துகாட்டாக சமத்துவம் உலவும் மாவட்டம்தான், இந்த நாகை மாவட்டம்!

இத்தகைய பெருமைக்குரிய இந்த நாகை மாவட்டத்தில் 139 கோடியே 92 லட்சம் ரூபாய் மதிப்புள்ள 35 திட்டப் பணிகள் தொடக்க விழா - 82 கோடியே 99 லட்சம் ரூபாய் மதிப்பிலான 206 பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா - 38 ஆயிரத்தி 956 பேருக்கு நலத்திட்ட உதவிகள் என மொத்தம் 423 கோடி ரூபாய் மதிப்பிலான இந்த விழாவை மிக எழுச்சியோடு, மிகப் பிரம்மாண்டமாய் ஏற்பாடு செய்திருக்கக்கூடிய இந்த மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் அனைத்து பொறுப்பையும் உணர்ந்த அமைச்சர் தம்பி அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களையும், மாவட்ட ஆட்சியரையும், அவருக்குத்துணைநின்றவர்களையும் நான் வாழ்த்துகிறேன்! பாராட்டுகிறேன்!

பள்ளிக் கல்வித் துறையை தலைசிறந்த துறையாக வளர்த்தெடுக்கிறார் நம்முடைய அன்பில் மகேஸ் அவர்கள்! அவருக்கு திருச்சி சொந்த மாவட்டமாக இருந்தாலும், தஞ்சை மாவட்ட பொறுப்பாளராக சிறப்பாக பணியாற்றி, இப்போது நாகையிலும் வாகை சூடியிருக்கிறார்!

நேற்று முன்தினம் 72-ஆவது பிறந்த நாள் கொண்டாடிய நான் அதற்கடுத்து கலந்து கொள்கின்ற முதல் நிகழ்ச்சியே திருக்குவளையில் இருக்கக்கூடிய இந்த நாகை மாவட்டம் தான்! ஏனென்றால், நான் டெல்டாகாரன்.

“உருக்குலையா மங்கையவள் ஒளி முகத்தை முத்தமிட கருக்கலிலே கண் விழிக்கும் திருக்குவளை” என்ற அந்த அழகிய திருக்குவளை தந்திட்ட புதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர். முதல்வராக, தமிழினத் தலைவராக தனது உழைப்பால் உயர்ந்தார்! சூரியனாய்ப் பிறந்தார்! சூரியனாய் வாழ்ந்தார்! சூரியனாய் வலம் வந்தார்! சூரியனாய் ஒளி தந்தார்! இன்றும் அவருடைய ஒளியில் நம்மை நடைபோட வைத்துக் கொண்டிருக்கிறார்!

### தலைவர் கலைஞர் பிறந்த நாகை மாவட்டத்திற்குத் திட்டங்கள்!

அப்படிப்பட்ட தலைவர் கலைஞர் பிறந்த நாகை மாவட்டத்திற்கு செயல்படுத்தப்பட்ட திட்டங்களை சிலவற்றை சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால்,

● கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ்

24 கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுத் தொகையில் 42 உட்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இதுவரை 33 உட்கட்டமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டு



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.3.2025) நாகப்பட்டினத்தில் நடைபெற்ற அரசு விழாவில், 139 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் 35 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 82 கோடியே 99 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 206 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த விழாவில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை மற்றும் உழவர்நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் நாகை மாலி, முகமது ஷா நவாஸ், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தின் தலைவர் ந. கௌதமன், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் உ. மதிவாணன், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் பி. ஆகாஷ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

● 334.82 கி.மீ நீளமுள்ள சாலைகள் 161 கோடியே 31 லட்ச ரூபாய் மதிப்பீட்டுத் தொகையில் மேற்கொள்ளப்பட்டு பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது.

● நகர்ப்புற பகுதிகளில், 79.89 கி.மீ நீளமுள்ள சாலைகள் 36 கோடியே 96 இலட்ச ரூபாய் மதிப்பீட்டுத் தொகையில் மேற்கொள்ளப்பட்டு இதுவரை 74.08 கி.மீ நீளமுள்ள சாலைப்பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

● 14 பாலங்கள் கட்டும் பணிகள் 132 கோடியே 14 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுத் தொகையில் மேற்கொள்ளப்பட்டு, இதுவரை 13 பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது.

● 194 திருக்கோயில்களில், 70 கோடியே 11 இலட்சம் ரூபாய் அளவில் 668 பணிகள் முடிக்கப்பட்டிருக்கிறது.

● 80 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தி முடிக்கப்பட்டிருக்கிறது.

● 55 மருத்துவக் கட்டமைப்புகள் செய்து தரப்பட்டிருக்கிறது.

### செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள்!

இதையெல்லாம் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் என்றால், செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களை சொல்ல வேண்டும் என்றால்,

● நாகப்பட்டினத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட இருக்கிறது.

● நெடுஞ்சாலைத் துறையின் கீழ், 182.55 கி.மீ நீளமுள்ள சாலை பணிகள் 252 கோடியே 22 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுத் தொகையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

● 4 பேரூராட்சிகள் மற்றும் 6 ஊராட்சி ஒன்றியங்களுக்கு, ஆயிரத்தி 782 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நடைபெற்று வருகிறது!

● வேதாரண்யம் - அவ்வையார் விஸ்வநாத சுவாமி திருக்கோயில் திருப்பணிகளை 18 கோடியே 95 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப் போகிறோம்.

● வேதாரண்யம் அரசு மருத்துவமனை 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டு வருகிறது!

● ஆற்காட்டுத் துறையில் 150 கோடி ரூபாயிலும்,

● வெள்ளப்பள்ளத்தில், நூறு கோடி ரூபாயிலும் புதிய மீன்பிடி துறைமுகம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது!

● சாமந்தான்பேட்டையில், சிறிய மீன்பிடி துறைமுகம் அமைப்பதற்கான திட்ட மதிப்பீடு ஒன்றிய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. நாகை மாவட்டத்துக்கு மட்டுமே இவ்வளவு திட்டங்கள் செய்து தரப்பட்டிருக்கிறது என்றால், தமிழ்நாடு முழுவதும் எவ்வளவு திட்டங்கள் செய்யப்பட்டிருக்கிறது என்று தயவுசெய்து எண்ணிப் பாருங்கள்...

### 3 சட்டமன்றத் தொகுதிகளில் பயனடைந்த பயனாளிகள்!

அடுத்து, நம்முடைய திராவிட மாடல் அரசின் முத்திரைத் திட்டங்களில் நாகை மாவட்டத்தில் மூன்று சட்டமன்ற தொகுதிகளில் பயனடைந்த பயனாளிகளின் எண்ணிக்கை மட்டும் சொல்கிறேன்....

➢ 1 இலட்சத்து 32 ஆயிரத்து 162 மகளிருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் கிடைக்கிறது.

➢ புதுமைப் பெண் திட்டம் மூலமாக மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் கல்லூரியில் படிக்கக்கூடிய 7 ஆயிரத்து 469 மாணவிகள் அதைப் பெற்று பயனடைகிறார்கள்.

➢ அதுமட்டுமல்ல, தமிழ்ப்புதல்வன் திட்டம் மூலமாக 5 ஆயிரத்து 614 மாணவர்கள் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் பெற்று வருகிறார்கள்.

➢ நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 20 ஆயிரத்து 824 மாணவர்கள் திறன் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

➢ 26 ஆயிரத்து 101 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ஆயிரத்து 308 கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டிருக்கிறது.

➢ 561 பெண்களுக்கு திருமண கடனுதவி தரப்பட்டிருக்கிறது.

➢ மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தால் 2 இலட்சம் பேர் பயனடைந்திருக்கிறார்கள்.

➢ இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48 திட்டத்தில், 3 ஆயிரத்து 695 நபர்களின் உயிர் காப்பாற்றப்பட்டிருக்கிறது.

➢ 46 ஆயிரத்து 913 பேர் முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தால் பயனடைந்திருக்கிறார்கள்.

➢ 17 ஆயிரத்து 767 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு நிதி உதவி தரப்பட்டிருக்கிறது.

➢ 18 ஆயிரத்து 332 குழந்தைகள் காலை உணவுத் திட்டத்தில் பயனடைந்து கொண்டிருக்கிறார்கள்.

➢ 31 ஆயிரத்து 953 பேருக்கு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கிறது.

➢ 17 ஆயிரத்து 858 பயனாளிகளுக்கு 53 கோடியே 67 லட்ச ரூபாய் அளவிலான நகைக்கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது.

➢ மீன்பிடி தடைக்காலத்தில் மீனவர்களுடைய வாழ்வாதாரத்தை பாதுகாக்கின்ற வகையில், ஏற்கெனவே வழங்கப்பட்ட நான்காயிரம் ரூபாய் நிதியுதவி, எட்டாயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

- இப்படி ஒவ்வொருவருக்கும் பார்த்துப் பார்த்து நம்முடைய திராவிட மாடல் அரசு நன்மையை செய்து கொண்டிருக்கிறது!

### நாகை மாவட்டத்திற்கு 6 முக்கிய அறிவிப்புகள்!

இத்தனை நன்மைகளை செய்வதுடன், இது போன்ற மிகப்பிரமாண்டமான நிகழ்ச்சிகளில் உங்களை பார்க்கும்போது, மேலும் சில அறிவிப்புகளை வெளியிடவேண்டும்... அதையெல்லாம் விரைவாக செய்து கொடுக்க வேண்டும் என்று நான் நினைப்பதுண்டு. அந்த வகையில், இந்த நாகை மாவட்டத்திற்கான ஆறு முக்கிய அறிவிப்புகளை இப்போது நான் வெளியிடுகிறேன்...

**முதல் அறிவிப்பு - வேதாரண்யம் மற்றும் தலைஞாயிறு பகுதிகளில் இருக்கின்ற இளைஞர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு, வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்ற வகையில், தென்னடார் பகுதியில், அரசு புறம்போக்கு நிலத்தில் சுமார் 450 ஏக்கர் பரப்பளவில், 250 கோடி ரூபாய் செலவில், புதிய சிப்காட் தொழிற்பேட்டை அமைக்கப்படும்! காவிரி டெல்டா பகுதியில், அனுமதிக்கத் தகுந்த வேலை வாய்ப்புகளை அளிக்கக்கூடிய தொழிற்சாலைகள் இங்கு தொடங்கப்படும்.**

**இரண்டாவது அறிவிப்பு - விழுந்தமாவடி, வானவன்மகாதேவி மற்றும் காமேஸ்வரம் ஆகிய மீனவ கிராமங்களில், 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய மீன் இறங்குதளங்கள் அமைக்கப்படும்.**

**மூன்றாவது அறிவிப்பு - தெற்குப் பொய்கை நல்லூரிலும் - கோடியக்கரையிலேயும் - தலா 8 கோடியே 50 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில், மூன்று தளங்கள் கொண்ட பல்நோக்குப் பேரிடர் மையங்கள் கட்டப்படும்!**

### இலங்கைக் கடற்படையால் மிகப்பெரும் பிரச்சினை!

**நான்காவது அறிவிப்பு - நாகப்பட்டினம் நகராட்சியின் 150 ஆண்டுகள் பழமை வாய்ந்த நகராட்சி கட்டடம் 4 கோடி ரூபாய் செலவில் பழமை மாறாமல் புதுப்பிக்கப்படும்.**

**ஐந்தாவது அறிவிப்பு - நாகப்பட்டினம், கீழ்வேளூர் மற்றும் வேதாரண்யம் வட்டங்களில் இருக்கின்ற பல்வேறு வடிகால்கள் மற்றும் வாய்க்கால்களின் மதகுகளும், இயக்கு அணைகளும் 32 கோடி ரூபாய் செலவில் மறுசீரமைக்கப்படும்!**

**ஆறாவது அறிவிப்பு - உலகம் முழுவதும் இருந்து வரக்கூடிய இஸ்லாமியர்கள் மட்டுமில்லாமல், பல மதங்களைச் சேர்ந்த மக்களும் வருகை தருகின்ற நாகூர் தர்கா, இந்த நாகை மாவட்டத்தில்தான் இருக்கிறது. இங்கே இருந்து இஸ்லாமிய மக்களுக்கு மகிழ்ச்சி தரக் கூடிய ஒரு செய்தியை ஆறாவது அறிவிப்பாக வெளியிடுவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமியர்களுக்காக - சென்னை விமான நிலையம் அருகில், நங்கநல்லூரில், 65 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தமிழ்நாடு ஹஜ் இல்லம் கட்டப்படும்!**

மீனவர்கள் நிறைந்த நம்முடைய மாவட்டத்தின் மிகப்பெரிய பிரச்சினை என்னவென்று கேட்டீர்கள் என்றால், இலங்கைக் கடற்படையால் நம்முடைய மீனவர்கள் கைது செய்யப்படுவதுதான்... கடந்த 22-ஆம் நாள், இராமேஸ்வரம் மீன் பிடி துறைமுகத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்ற 32 மீனவர்களையும், அவர்களுடைய ஐந்து மீன் பிடி படகுகளையும் இலங்கை கடற்படை 23-ஆம் நாள் கைது செய்தார்கள்... உடனடியாக, இது தொடர்பாக, இந்திய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு நான் கடிதம் எழுதியிருக்கிறேன். இந்த விவகாரத்தில் என்ன நடந்தது?

கடந்த மாதம் 18-ஆம் நாள் மீனவர் சங்கங்களைச் சேர்ந்தவர்கள் என்னை கோட்டையில் சந்தித்து இதுபற்றிப் பேசினார்கள்... அவர்கள்வேதனையுடன்குறிப்பிட்டது என்னவென்றால்... “மீனவர்களை கைது செய்தார்கள்... கடற்படை ரோந்து படகை, மீனவர் படகு மீது மோதவிட்டு மூழ்கடித்தார்கள்... வலைகளை நாசப்படுத்தினார்கள்... பிடித்து வைத்திருக்கின்ற மீன்கள் திருடப்படுகிறது... இதையெல்லாம் கேட்பார் இல்லாமல் நடக்கிறது” என்று தங்களுடைய மனக்குமுறலை வெளிப்படுத்தினார்கள்...

அதுமட்டுமல்ல, அண்மைக் காலத்தில், கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுதலை செய்யும்போது, பெரும் தொகையை இலங்கை நீதிமன்றங்கள் அபராதமாக விதிப்பதாகவும், பறிமுதல் செய்யப்பட்ட மீனவர்களின் விசைப் படகுகளை ஏலம் விடுகின்ற இலங்கை அரசு, இப்போது அவர்களை விடுதலை செய்யும்போது அபராதமும் விதிக்கின்றது. தங்களுடைய வாழ்வாதாரத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறியிருப்பதாக வேதனையுடன் சொன்னார்கள்.

பிரதமர் மோடி அவர்கள் பதவி ஏற்ற கடந்த 2014-ஆம் ஆண்டு முதல் இது வரையிலான இந்த ஒன்றிய அரசின் பத்தாண்டுகளில் மட்டும் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழ்நாட்டு மீனவர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? மூவாயிரத்து 656 பேர்! அதில் இந்த நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் 860 பேர்! மொத்தம் 611 விசைப்படகுகளை பறிமுதல் செய்திருக்கிறார்கள். அதில் நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களின் 116 விசைப்படகுகளை பறிமுதல் செய்திருக்கிறார்கள்.

### ஒன்றிய அரசுதான் நிரந்தரத் தீர்வு காண வேண்டும்!

கடந்த ஆண்டு, நவம்பர் 22-ஆம் தேதி வரை, இலங்கைக் கடற்படையினர் தமிழ்நாட்டு மீனவர்களை 736 முறை தாக்கியிருப்பதாக, வெளியுறவுத் துறை இணை அமைச்சரே அறிக்கை தாக்கல் செய்திருக்கிறார். நான் சொல்லவில்லை. இலங்கையில் என்ன பிரச்சினை என்பதை தெளிவாகவும், என்னென்ன பாதிப்பு என்பதையும், ஒன்றியத்தின் வெளியுறவுத் துறை அமைச்சராக இருக்கக்கூடிய இணை அமைச்சர் அறிக்கையை ஆதாரத்துடன் தாக்கல் செய்திருக்கிறார். இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண வேண்டிய பொறுப்பு, ஒன்றிய அரசுக்குதான் இருக்கிறது! ஆனால், செய்கிறார்களா? இல்லை.

> **“ கச்சத்தீவு அருகே தமிழ்நாட்டு மீனவர்கள் மீன்பிடிப்பதை இலங்கை அனுமதிக்கும் வகையில், புதியதொரு ஒப்பந்தத்தை மேற்கொள்ள பிரதமர் மோடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக நான் உங்களை மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ”**

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்